ஒரு சில இடங்களுக்காக தேர்தலுக்கு தேர்தல் அணிமாறும் அவலநிலையில் கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளன.

- ஆதிக்கசாதி அரசியலை முறியடித்து ஆதித்தமிழர்கள் ஆட்சியை மலரச்செய்ய களம் இறங்குவோம்.
- அனைத்து ஒடுக்கப்பட்ட சாதிகளையும் அணி திரட்டுவோம்.
- மக்கள் தொகை அடிப்டையில் ஒதுக்கீட்டை பகிர்ந்தளிப்போம்.
- சரியான சாதிவாரியாக மக்கள் தொகையை கணக்கெடுக்க அரசை வலியுறுத்துவோம்.
- 50 சதவீத இடஒதுக்கீடு மகளிர்க்கு வழங்குவோம்.

ஆதித்தமிழரான அருந்ததியர்கள் ஏறத்தாழ தமிழ்நாட்டில் 50 இலட்சம் பேர் உள்ளோம். இனி நமக்கான அரசியலை நாம் வகுப்பதைத் தவிர வேறுவழியில்லை. நாம் அமைப்பாவதில் பல இடர்கள் இருந்தபோதிலும், அமைப்பாக அணிதிரள்வதில் மட்டுமே நம் வெற்றி அடங்கியுள்ளது.

வடக்கில் தாழ்த்தப்பட்ட மாயாவதி முதலமைச்சர் ஆகும்போது தமிழ்நாட்டில் இந்த நிலைக்கு வழி உண்டா? உண்டு. ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்கள் தாழ்த்தப்பட்டோர் தலைமை தாங்கும் தலித் அரசியலை ஆதித்தமிழர்களின் அரசியலை வென்றெடுக்க வேண்டும். தலித் அரசியல் பேசி நீர்த்துப்போன தலைவர்களை தற்போது நாம் நேரடியாக பார்த்துக் கொண்டுள்ளோம். தடம் மாறியதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. முதலில் நாம் அணியாவோம்.

எனவே, ஆதித்தமிழர் பேரவை அனைத்து அரசியல் கட்சிகளுக்கு நம் இருப்பை தெளிவாக்கிட இந்த தேர்தலை பயன்படுத்த வேண்டும். அந்த வகையில் அருந்ததியர்களை (சக்கிலியர்கள்) புறக்கணித்துள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் நாம் புறக்கணித்து இத்தேர்தலையும் புறக்கணிப்போம். (40 தொகுதிகளில் ஒரு அருந்ததியர் கூட நிறுத்தப்படவில்லை)

நமக்கான புதிய பாதையில் ஆதித்தமிழர் பேரவையின் கிளைகளை நமது பகுதியிலேயே தொடங்குவோம்.

அரசியல் கட்சிகளின் போலி முகத்திரையை கிழித்தெறிவோம்.

**அருந்ததியர் வாக்கு அன்னியருக்கு இல்லை என்று முழங்குவோம்.**

இவண்,

## ஆதித்தமிழர் பேரவை

தொடர்புக்கு : 98422 19108, 93459 32391, 94430 63962

நிலா, ✆ 0424-2258503, 94430-45155





# நாடாளுமன்றத் தேர்தலில் வஞ்சிக்கப்பட்ட அருந்ததியர் சமூகம்

ஆதித்தமிழர் விடுதலை இயக்கம் · அனைவர்க்கும் விடுதலை

ஆதித்தமிழர் பேரவை

**தமிழ்நாட்டில் உள்ள
40 நாடாளுமன்ற தொகுதிகளில்
எந்தத் தொகுதியிலும்
அருந்ததியர்கள்
வேட்பாளர்களாக நிறுத்தப்படவில்லை.**

## அருந்ததியர்கள் வாக்கு அன்னியருக்கு இல்லை

அருந்ததியர் (சக்கிலியர்) மக்கள் சந்திக்கும் 15-வது நாடாளுமன்றத் தேர்தல் இது. 100 சதவீத வாக்களிப்பது மட்டுமே அருந்ததியரின் உயரிய கடமை. ஆனால் 100 சதம் **வஞ்சிக்கப்படுகிற உண்மை, தெரியாமலேயே அருந்ததியர்களும் கறை வேட்டிக் கட்டிக்கொண்டு, கட்சிக்காரர்களாக ஆதிக்கசாதி அரசியல் கட்சிகளில் வலம் வருவதும், கொத்தடிமைகளாக அரசியல் கட்சிகளில் இருப்பதும், மிகவும் வெட்கக்கேடான ஒன்று.**

விடுதலைக்குப் பிறகு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இதுவரை நான்கு பேர் மட்டுமே தேர்வு பெற்றனர். ஆனால் நமக்கு கிடைத்திருக்க வேண்டியது 28 பேர்கள். சட்டப்பேரவையில் கிடைக்க வேண்டிய 180 உறுப்பினர்களுக்கு மாறாக 20 பேர் மட்டுமே தேர்வு பெற்றனர்.

இவர்கள் கட்சிகளில் இருந்து உரிய வாய்ப்பு மறுக்கப்பட்ட போதிலும், **வெறுமனே காலம்தள்ளி உள்ளார்கள்.** ஆனால், சமூக நீதி முற்றாக மறுக்கப்பட்டுள்ளது. தற்போது தொகுதி மறுசீரமைப்பின் காரணமாக மேற்கு மாவட்டங்களில் இருந்த **அருந்ததியர் தொகுதிகளான ராசிபுரம், பொள்ளாச்சி** ஆகியவை நீக்கப்பட்டதுடன் 5 தொகுதிகளை பறையர்கள் அடர்த்தியாக உள்ள வட மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டு அருந்ததியர்களுக்கு அநீதி **இழைக்கப்பட்டுள்ளது.** பள்ளர்கள் அடர்த்தியாக உள்ள தென் மாவட்டத்தில் **தென்காசியும்,** அருந்ததியர்கள் அடர்த்தியாக உள்ள மேற்கு மாவட்டத்திற்கு நீலகிரி தொகுதியும் ஒதுக்கப்பட்டது.

எப்படியும் நீலகிரி தொகுதியில் அருந்ததியர் (சக்கிலியர்) வேட்பாளர்கள் நிறுத்தப்படுவார்கள் என எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்தோம். தி.மு.க. தலைமைக்கு இது குறித்து ஆதித்தமிழர் பேரவை சார்பில் கடிதம் எழுதியது. ஆனால், மிஞ்சியது ஏமாற்றமே.

நீலகிரி தொகுதியில் மத்திய அமைச்சர் ஆ. ராசா (பறையர்) நிறுத்தப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக நீலகிரியில் ம.தி.மு.க. சார்பில் மருத்துவர் கிருஷ்ணன் (பள்ளர்) நிறுத்தப்பட்டுள்ளார்.

அருந்ததியர்கள் அடர்த்தியாக உள்ள மேற்கு தளத்திலேயே அருந்ததியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். சமூகநீதி குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளது. தென்காசியில் பள்ளரைத்தவிர வேறுஎவரும் நிற்க முடியாது. அதேபோல வடமாவட்டத்தில் உள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர், சிதம்பரம், விழுப்புரம், நாகப்பட்டினம் ஆகிய தொகுதிகளில் பறையரைத் தவிர வேறு யாரையும் வேட்பாளராக நிறுத்தவில்லை.

ஆனால் நீலகிரியில் மட்டும் பள்ளரும், பறையரும் வேட்பாளராக நிற்கிறார்கள். அருந்ததியர்கள் வேடிக்கைப் பார்க்கிற சூழல் ஏற்பட்டுள்ளது. இதற்கு சாதிவெறி பிடித்த ஆதிக்கசாதி அரசியல்தான் காரணமாக உள்ளது.

சமத்துவ அரசியல் எனில், விடுதலை சிறுத்தை கட்சிக்கு 2 பொது தொகுதிகளை தி.மு.க. கொடுத்திருக்கலாம். மத்திய அமைச்சர் ராசாவை பொதுத்தொகுதியில் நிறுத்தியிருக்கலாம்.

பெரியார் வழி வந்ததாக பேசுகிற திராவிட கட்சிகள் இன்று சமூகநீதி மறந்து ஆதிக்க சாதிகளின் பிடிக்குள் சிக்கித் தவிக்கின்றன. ஒருபோதும் இவர்கள் ஆதித்தமிழர்களை மதிக்கப் போவதில்லை. பிறகு அருந்ததியர்களுக்கு அதிகாரம் எங்கே அளிக்கப்போகிறார்கள்.

- கையால் மலம் அள்ளும் தொழில் மாற்றம் செய்ய ஒதுக்கீடு செய்த 58 . 75 கோடி இதுவரை என்னாயிற்று என்று தெரியவில்லை.
- தூய்மை தொழிலாளர் நலவாரியம் அதிகாரமற்று, செயலற்று கிடக்கிறது. அருந்ததியர்களுக்கு 3 சத உள் இடஒதுக்கீடுக்கான சட்ட முன்வடிவு சட்டப்பேரவையில் நிறைவேறியதோடு சரி. அதற்குப்பிறகு எந்தவித நடவடிக்கையும் இல்லை.
- அறிவிக்கப்பட்ட 2 ஏக்கர் நிலத்தில் எத்தனை அருந்ததியர்கள் பயன்பெற்றார்கள்?
- பஞ்சமி நிலங்களை மீட்பதற்கான எந்தவித திட்டமும் அரசியல் கட்சிகளிடம் இல்லை.
- இடஒதுக்கீட்டை மக்கள் தொகைக்கேற்ப 25 சதமாக மாற்றுவதற்கோ, பின்னடைவு பணியிடங்கள் நிரப்புவதற்கோ இவர்கள் திட்டத்தில் இல்லை.
- அரசுப்பணிகளில் பதவி உயர்வில் இடஒதுக்கீடு நடைமுறையில் இல்லை.
- வன்கொடுமை வழக்குகள் நீர்த்துப் போவதற்கு ஆதிக்கசாதியின் அதிகாரிகளும், ஆளுகின்ற அரசுகளும் துணையாக உள்ளன.

சமத்துவம் பேசும் பாட்டாளி மக்கள் கட்சியில் 7 தொகுதிகளில் 6 தொகுதியில் வன்னியரையும், 1 தொகுதியில் பறையரையும் நிறுத்தியுள்ளது. அருந்ததியர்களுக்கு வாய்ப்பு இல்லை,

திருமாவளவன் 2 தனித்தொகுதிகளிலும் பறையர்களையே நிறுத்தியுள்ளார்.

அருந்ததியர் உள் இட ஒதுக்கீடு குறித்து அனைத்துக் கட்சி கூட்டத்தில் கருத்துச் சொல்ல மறுத்து பின் உள்இட ஒதுக்கீட்டை எதிர்த்த அ.தி.மு.க. அருந்ததியர்களுக்கு எந்தவித பிரதிநிதித்துவமும் வழங்கவில்லை. இவர்களுக்கு தக்க பாடம் புகட்டுவோம்.

நடிகராக இருந்து நாடாள விரும்பும் விஜயகாந்த் திரைப்படத்தில் மட்டுமே சமத்துவம் பேசுகிறார், நடைமுறையில் இல்லவே இல்லை.

ஈழத்தமிழர்கள் மீது போர்தொடுப்பது இந்திய அரசே, இராணுவத் தளவாடங்கள் வழங்கியதுடன் இராணுவப் பொறியாளர்களையும் போர்க்கலத்திற்கு அனுப்பி கொடுமை செய்வது. இதற்கு ஆதரவாக இருப்பது காங்கிரஸ் கட்சி. ஆகவே இவர்களையும் புறக்கணிப்போம்.